அருளப்பர் 16:33

என்னில் நீங்கள் சமாதானத்தைக் கண்டடையும்படி இதையெல்லாம் நான் உங்களுக்குச் சொன்னேன். உலகில் உங்களுக்கு வேதனை உண்டு; ஆயினும் தைரியமாயிருங்கள்: நான் உலகை வென்றுவிட்டேன்" என்றார்.

உரோமையர் 12:21

தீமை உன்னை வெல்ல விடாதே, நன்மையால் தீமையை வெல்க.

லூக்காஸ் 1:37

ஏனெனில், கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை" என்றார்.

1 கொரிந்தியர் 15:57

ஆனால் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாய் நமக்கு இந்த வெற்றிதரும் கடவுளுக்கு நன்றி.

1 அருளப்பர் 5:4

ஏனெனில், கடவுளிடமிருந்து பிறந்தவன் எவனும் உலகை வெல்கிறான். உலகைத் தோற்கடித்து நாம் அடைந்த வெற்றி நம் விசுவாசமே.

உரோமையர் 8:37

ஆனால் நம்மேல் அன்பு வைத்தவரின் செயலால் நாம் இவை அனைத்திலும் மாண்புமிக்க வெற்றி அடைகிறோம்.

சங்கீதங்கள் 3:3

ஆனால், ஆண்டவரே, என்னைக் காப்பவர் நீரே: எனக்குப் பெருமை தருபவர் நீரே; நான் தலை நிமிரத் துணை செய்பவர் நீரே.

எபிரேயர் 12:1

எனவே, எண்ணிக்கையில்லாச் சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து நிற்க, நமக்குத் தடையாயிருக்கும் எந்தச் சுமையையும், நம்மை எளிதில் வயப்படுத்தும் பாவத்தையும் உதறித் தள்ளிவிட்டு, நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மன உறுதியோடு ஓடுவோமாக.

அருளப்பர் 1:5

அவ்வொளி இருளில் ஒளிர்ந்தது; இருளோ அதை மேற்கொள்ளவில்லை.

1 இராயப்பர் 5:8

தெளிந்த மனத்தோடு விழிப்பாயிருங்கள்; ஏனெனில், உங்கள் எதிரியான அலகை, கர்ச்சிக்கும் சிங்கம்போல் யாரை விழுங்கலாமெனத் தேடித் திரிகிறது.

1 திமோத்தேயு 6:12

விசுவாச வாழ்வு என்னும் சீரிய பந்தயத்தில் தளராதீர். முடிவில்லா வாழ்வைக் கைப்பற்றிக் கொள்ளும். அதற்காகவே அழைக்கப் பெற்றிருக்கிறீர். அதை முன்னிட்டே பல சாட்சிகள் முன்னிலையில் சிறந்த விசுவாச அறிக்கை செய்தீர்.

1 அருளப்பர் 4:4

அன்புக் குழந்தைகளே, நீங்களோ கடவுளைச் சார்ந்தவர்கள்; நீங்கள் அந்தப் போலித் தீர்க்கதரிசிகளை வென்றுவிட்டீர்கள்; ஏனெனில், உலகில் இருக்கும் அவனைவிட உங்களுள் இருப்பவர் மேலானவர்.

1 அருளப்பர் 5:5

உலகை வெல்பவன் யார்? இயேசு, கடவுளின் மகன் என்று விசுவசிப்பவனே.

திருவெளிப்பாடு 3:21

நான் வெற்றிகொண்டு என் தந்தையின் அரியணையில் அமர்ந்ததுபோல, வெற்றிகொள்பவனுக்கு என் அரியணையில் அமரும் உரிமை அளிப்பேன்.

சக்கரியாஸ் ஆகமம் 9:9

சீயோன் மகளே, மிகுந்த மகிழ்ச்சியால் அக்களி, யெருசலேம் மகளே, ஆர்ப்பரி; இதோ, உன் அரசர் உன்னிடம் வருகிறார், நீதியும் வெற்றியும் பெற்றுக்கொண்ட அந்த வீரர் எளியவர்; கழுதையின் மேலும், பொதிமிருகக் குட்டியின் மேலும் அமர்ந்து வருகிறார்.